**ஊழியர் சேம நிதியம் - 2021**

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

ஊழியர் சேம நிதியத்தின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானச் செலவினக்கூற்று, விரிவான வருமானக் கூற்று, மூலதன மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள் பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுடன் கூடிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கங்களை தவிர்த்து, ஊழியர் சேம நிதியத்தின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக் கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிதியம் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது நிதியத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் நிதியம் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

நிதியத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நிதியத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வு விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)

---

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும். துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும் என்னால்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிறுவகம் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக நிறுவகத்தின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக நிறுவகத்தின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்,

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலம் பினிவருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது நிதியத்தின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது நிதியத்தின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க நிதியம் செயற்படுகின்றதா எனவும்,

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது எனவும்,

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளது எனவும்,

## 1.5 நிதிக்கூற்றுக்களை தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புகள்

### 1.5.1 நிதிக்கூற்றுக்களை தயாரித்தல் தொடர்பான உள்ளகக் கட்டுப்பாடு

கொடுக்கல் வாங்கல் முகாமைத்துவத்தின் சாதாரண மற்றும் நிச்சயிக்கப்பட்ட அதிகார பலத்துடன் செயற்படுதல், பொருத்தமான வகையில் கணக்கீட்டுத் தரங்களுக்கு இணங்க நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதற்குத் தேவையான வகையில் கொடுக்கல் வாங்கல்களை குறித்துக் கொள்ளுதல் மற்றும் சொத்துக்களுக்கான கணக்கீட்டு நடவடிக்கைகளைப் பேணிச் செல்லுதல், முகாமைத்துவத்தின் சாதாரண மற்றும் நிச்சயிக்கப்பட்ட அதிகார பலத்துடன் மட்டும் சொத்துக்களுக்குள் நுழைதல், குறித்துக் கொள்ளப்பட்ட சொத்துக்களுக்கான கணக்கீட்டு நடவடிக்கைகளை சொத்துக்களுடன் நியாயமான காலப் பகுதியில் ஒப்பிடுதல் மற்றும் வேறுபாடு இருக்குமாயின் அவை தொடர்பில் முறையான நடவடிக்கை எடுத்தல் என்பவற்றுக்கான நியாயமான உறுதிப்பாட்டை பெற்றுக் கொள்வதற்குப் போதுமான “சிறந்த முறையில் திட்டமிடப்பட்ட” உள்ளகக் கணக்கீட்டு கட்டுப்பாடு ஒழுங்கமைப்பு ஒன்றினை நிறுவனத்தினால் பேணிச் செல்லுதல் அவசியமாகும்.

### 1.5.2 இலங்கைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| குறித்த நியமத்துடனான தொடர்புடன் இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| இலங்கைக் கணக்கீட்டு நியம இலக்கம் 16 இன் 51 ஆம் பந்தியின் பிரகாரம், நடைமுறை அல்லாத சொத்துக்களின் பயன்பாடு ஆயுட்காலம் வருடாந்தம் மீளாய்வு செய்யப்பட வேண்டிய போதிலும், நிதியம் அதற்கமைய நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக நிதிக் | இந்த நிலையான சொத்துக்கள் தொடர்பான சிக்கல்களுக்குத் தீர்வினைப் பெற்றுக் கொடுக்கும் நோக்கில் நிலையான சொத்துக்களுக்கான மீள்கணக்கீடு | நியமத்தின் பிரகாரம் நடைமுறையல்லா சொத்துக்கள் தொடர்பில் நடவடிக்கை |

| | | |
|---|---|---|
| கூற்றுக்களுக்கான பெறுமானத் தேய்வு கணிப்பீடு செய்யும் பட்டோலையின் பிரகாரம் முழுமையாக தேய்விடப்பட்டிருந்த நிலையான சொத்துக்களின் பெறுமதி நிதிச் சபை மற்றும் தொழில் திணைக்களத்திற்கு அமைய முறையே ரூபா. 138.70 மில்லியன் மற்றும் ரூபா. 461.11 மில்லியன் ஆகும். அந்த சொத்துக்களிடையே தொடர்ந்தும் பயன்பாட்டிற்கு உட்படுத்தப்படும் சொத்துக்கள் இனங் காணப்பட்டு இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 16 இன் 51 ஆம் பிரிவின் பிரகாரம், அசையாச் சொத்துக்களுக்கான பயன்படு ஆயுட்காலம் மீளாய்வு செய்யப்படாது ஏற்பட்ட மதிப்பீட்டு வழுவினை இலங்கைக் கணக்கீட்டு நியம இலக்கம் 08 இன் பிரகாரம் மீள்திருத்துவதற்கும், பயன்பாட்டுக்கு எடுக்கப்படாத சொத்துக்களை உரிய முறையில் அகற்றுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | மேற்கொள்ளுவதற்கு தேவையான நடவடிக்கைகள் இடம் பெறுவதுடன் கொவிட் 19 பரவல் மற்றும் நாட்டில் தற்போது நிலவும் பொருளாதார நெருக்கடிக்கு முகம் கொடுத்து அந்த நடவடிக்கைகள் எதிர்பார்க்கப்பட்ட வகையில் மேற்கொள்வதற்கு முடியாதுள்ளது. | எடுக்க வேண்டும். |

**1.5.3 கணக்கீட்டு குறைபாடுகள்**

| | கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நிதியத்தினால் 2021 திசெம்பர் 31 ஆம் திகதியில் சமர்ப்பிக்கப்பட்ட 08 வங்கிக் கணக்குகளுக்கு உரிய வங்கிக் கணக்கிணக்கக் கூற்றுகளுக்கு அமைய 2001 தொடக்கம் 2021 திசெம்பர் 31 வரையான காலப் பகுதியில் பின்வரும் விபரங்கள் குறிப்பிடப்பட்டுள்ள இனம் காணப்படாத கொடுக்கல் வாங்கல்களை திருத்துவதற்கு அல்லது தீர்ப்பதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படாது தொடர்ந்தும் வங்கிக் கணக்கிணக்கக் கூற்றுகளில் காட்டப்பட்டுள்ளன. | | |
| (i) | 2021 திசெம்பர் 31 ஆம் திகதியில் வழங்கப்பட்ட ஆனால் மதிப்பிழந்த காசோலைகள், வங்கிக் கூற்றில் குறிப்பிடப்படாத கொடுக்கல் வாங்கல்கள், காசுப் புத்தகத்தில் குறிப்பிடப்படாத கொடுக்கல் வாங்கல்கள், நேரடி வரவு / செலவு மற்றும் இனம் காணப்படாத ஏனைய மீதிகளாக மொத்தம் ரூபா 13,316.08 மில்லியன் காணப்பட்டதுடன் அதில் ரூபா. 11,103.61 மில்லியன் 2022 மே 31 ஆம் திகதி வரையிலும் தீர்க்கப்படாது இருந்தது.. | வங்கிக் கூற்று மற்றும் காசுப் புத்தகத்தில் குறிப்பிடப்படாத கொடுக்கல் வாங்கல்கள் தீர்க்கப்படாமைக்குக் காரணமாக உள்ளது வங்கிக் கூற்றில் மற்றும் காசுப் புத்தகத்தில் குறிப்பிடப்பட்ட பெறுமதிகளில் உள்ள வேறுபாடுகளை இனம் காணுவதற்குப் போதுமான தகவல்கள் இல்லாதிருந்தமையே ஆகும். நேரடி வரவு மற்றும் செலவு கொடுக்கல் வாங்கல்கள் தீர்க்கப்படாமல் காரணமாக உள்ளமைக்கு அந்தக் | மதிப்பிழந்த காசோலைகள், வங்கி கூற்றில் குறிக்கப்படாத கொடுக்கல் வாங்கல்கள், காசுப் புத்தகத்தில் குறிக்கப்படாத கொடுக்கல் வாங்கல்கள், நேரடி வரவு / செலவு மற்றும் இனம் காணப்படாத மீதிகள் என்பன உடனடியாக இனங் காணப்பட்டு தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | கொடுக்கல்வாங்கல்களுக்கு உரிய காசுப் புத்தகத்தில் உள்ள ஒரு சில குறிப்பு இலக்கங்கள் வங்கிக் கணக்கு இணக்கக் கூற்றில் காணப்படும் குறித்த திகதியில் உள்ள குறிப்பு இலக்கத்துடன் ஒத்துப்போகாமையே காரணம் ஆகும். | |
| (ii) | 2021 திசெம்பர் 31 ஆம் திகதியில் வைப்பிலிடப்பட்ட ஆனால் தேறாத காசுக் கட்டளை, தேறாத காசோலை மற்றும் வழங்கப்பட்ட ஆயினும் சமர்ப்பிக்கப்படாத காசோலை என்பவற்றின் மொத்தமாக ரூபா.2,322.59 மில்லியன் காணப்பட்டதுடன் அதில் ரூபா.715.70 மில்லியன் 2022 மே 31 ஆம் திகதி வரையிலும் தீர்க்கப்படாது காணப்பட்டது. | வைப்பிலிடப்பட்ட ஆனால் தேறாத காசுக் கட்டளைகளில் ரூபா. 66.57 மில்லியனும், வைப்பிலிடப்பட்ட ஆனால் தேறாத காசோலைகளில் ரூபா. 843.54 மில்லியனும், வழங்கப்பட்ட ஆனால் சமர்ப்பிக்கப்படாத காசோலைகளில் ரூபா. 696.78 மில்லியனும் 2022 மே மாதம் வரையிலும் தீர்க்கப்படாது உள்ளது. | வங்கி கணக்கிணக்கக் கூற்றுகளில் உள்ளடக்கப்பட்ட வங்கிக் கூற்றுகளில் குறிப்பிடப்படாத கொடுக்கல் வாங்கல்களை உடனடியாக இனங்கண்டு தீர்ப்பதற்குப் பொருத்தமான வேலைத் திட்டங்கள் தயாரிக்கப்படல் வேண்டும். |
| (iii) | நிதியத்தினால் பயன்படுத்தப்படும் கணனி கணக்கீட்டு ஒழுங்கமைப்பின் குறைபாட்டினால் 2006 ஆம் ஆண்டு தொடக்கம் முன்கொணரப்பட்ட ரூபா. 141.32 மில்லியனான செலவு மீதியைத் திருத்துவதற்கு மீளாய்வு ஆண்டிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இந்த மீதியானது ஒரு கணக்கிற்கு உரியதாக உள்ளதுடன் அது 2006 ஆம் ஆண்டு தொடக்கம் 2007 ஆம் ஆண்டிற்கு உரிய வங்கி கூற்றில் உள்ள பல கொடுக்கல் வாங்கல்கள் வங்கி கணக்கிணக்கக் கூற்று தயாரிக்கும்போது கைவிடப்பட்ட காரணத்தினால் ஏற்பட்டவையாகும். 2006 ஆம் ஆண்டு மற்றும் 2007 ஆம் ஆண்டுகளுக்கு உரியதாகக் காணப்படும் வேறுபாட்டிற்காகக் குறித்த கணக்கீடு மேற்கொள்ளப்படுவதுடன், அதன் மூலம் அந்த மீதி எதிர்காலத்தில் திருத்தப்படக் கூடியதாக இருக்கும். | தீர்க்கப்படாத வங்கி மீதிகளை உடனடியாக இனம் கண்டு தீர்ப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | நிதியத்தின் கணக்கீட்டுக் கொள்கையின் பிரகாரம் மோட்டார் வாகனங்கள் வருடாந்தம் எளிய வழி முறையின் கீழ் 20 சதவீதம் தேய்மானம் செய்யப்பட வேண்டும். 2021 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறான நிதிக்கூற்றுக்கு அமைய (தொழில் திணைக்களத்திற்கு உரியதான ) மோட்டார் வாகன செலவு ரூபா 97.20 மில்லியனாக உள்ளதுடன் தேய்வு கணக்கிடும் ஏட்டிற்கு அமைய தேய்மானம் செய்யப்பட்ட மோட்டார் வாகனத்தின் செலவு ரூபா. 36.22 மில்லியன் ஆகும். அதற்கமைய மொத்த செலவு ரூபா. 60.98 மில்லியனான மோட்டார் வாகனத்திற்கு தேய்மானம் கணக்கிடப்பட வேண்டிய போதிலும் 2020 ஆம் ஆண்டு மற்றும் 2021 ஆம் ஆண்டுகளுக்கு தேய்மானம் கணக்கீடு செய்யப்பட்டு இருக்கவில்லை. | இந்த நிலையான சொத்துக்கள் தொடர்பிலான சிக்கல்களுக்குத் தீர்வு பெற்றுக் கொள்ளும் நோக்கில் நிலையான சொத்துக்கள் மீள்மதிப்பீடு செய்யப்படுவதற்குத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதுடன் கொவிட் - 19 பரவல் மற்றும் நாட்டில் தற்போது நிலவும் பொருளாதார நெருக்கடிக்கு முகம் கொடுத்ததனால் அந்த நடவடிக்கைகளை எதிர்பார்த்த வகையில் மேற்கொள்வதற்கு முடியாதிருந்தது. | நிதியத்தின் நிலையான சொத்துக்களின் தேய்மானக் கொள்கைக்கு அமைய நிலையான சொத்துக்களின் தேய்மானம் கணக்கிடப்படுதல் வேண்டும். |

**1.5.4 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டு கணக்குகள் அல்லது அறிக்கைகள்**

| | விடயம் | நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் பெறுமதி (ரூபா. மில்லியன்) | தொடர்புடைய அறிக்கைகளின் பிரகாரம் பெறுமதி (ரூபா. மில்லியன்) | வேறுபாடு (ரூபா. மில்லியன்) | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|---|
| (அ) | ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் | 1,034.75 | 574.27 | 460.48 | நிலையான சொத்துக்கள் மீள்மதிப்பீடு செய்யப்படுவதற்குத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதுடன் கொவிட் - 19 பரவல் மற்றும் நாட்டில் தற்போது நிலவும் பொருளாதார நெருக்கடிக்கு முகம் கொடுத்ததனால் அந்த நடவடிக்கைகளை எதிர்பார்த்த வகையில் மேற்கொள்வதற்கு முடியாதிருந்தது. | நிலையான சொத்துக்களின் சரியான பெறுமதி உரிய அனைத்து பட்டோலைகளின் பிரகாரம் காணப்படுகின்றதா என்பது உறுதிப்படுத்தப்படும் வகையில் சரியான புள்ளிவிபரத் தரவுகள் மற்றும் தகவல்கள் பேணப்படுதல் வேண்டும். |
| (ஆ) | அங்கத்துவ நிதியங்களினுள் உள்ளடக்கப்பட்டுள்ள 5 கணக்குகளின் | 85,362 | 42,580 | 42,782 | ‘AS/400’ கட்டமைப்பில் பண அடிப்படையில் (Cash basis) கொடுக்கல் வாங்கல்கள் பதிவு செய்யப்படுவதுடன் பொதுப் பேரேட்டில் கொடுக்கல் வாங்கல்கள் திரண்ட அடிப்படையில் (Accrued basis) பதிவு | குறித்த முழுமையான வேறுபாடுகள் சுட்டிக் காட்டப் படும் வகையில் இணக்கக் கூற்று தயாரிக்கப்படுதல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| மீதிகள் | | | | செய்யப்படுகின்றன. இதனால் இந்த இரண்டு கட்டமைப்பிலும் ஏதேனும் ஒரு நாளில் காணப்படும் மீதியில் இயற்கையாகவே வேறுபாடு ஏற்படும். இந்த வேறுபாட்டுக்கான இணக்கத்தினை தயாரித்தல் 2017 ஆம் ஆண்டு தொடக்கம் நடைபெற்று வருவதுடன் அதற்கு முந்தைய வருடங்களில் அவ்வாறான இணக்கம் தயாரிக்கப்பட்டிருக்காத காரணத்தால் இந்த முழுமையான வேறுபாட்டுக்குமான முழுமையான இணக்கத்தினை சமர்ப்பித்தலில் நடைமுறை சிக்கல்கள் காணப்படுகின்றன. |

**1.5.5 கணக்காய்விற்காக எழுத்து மூல சான்றுகளின்மை**

| விடயம் | தொகை (ரூபா. மில்லியன்) | முன்வைக்கப்படாத கணக்காய்வு சான்று | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| நிலையான சொத்துக்கள் | 1,034.75 | குறியீட்டு எண், வாங்கிய தேதி, செலவு, நிறுவப்பட்ட சொத்துகளின் இருப்பிடம் போன்ற அடிப்படைத் தகவல்களைக் கொண்ட நிலையான சொத்து பதிவேடு மற்றும் 2021 ஆம் ஆண்டிற்கான பொருள் மெய்மையாய்வு அறிக்கைகள். | அரச கணக்கீட்டு சுற்றறிக்கை இலக்கம் 267/2018 இன் பொது அறிவுரைகளின் கீழ், சிகாஸ் வேலைத் திட்டத்தில் நிலையான சொத்துக்கள் தொகுதியொன்று தயாரிக்கப்பட்டுள்ளது என்பதால், நிலையான சொத்துக்கள் ஏட்டில் கணனி உதிரி பாகங்கள் மற்றும் மென்பொருள் தொடர்பான நிலையான சொத்துக்கள் ஏட்டினை தொடர்ந்தும் பேணிச் செல்வது கட்டாயமல்ல என குறிப்பிடப்பட்டுள்ளது. அதனால் அதற்கமைய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என்பதனைத் தாழ்மையுடன் தெரிவித்துக் கொள்கிறேன். | அனைத்து நிலையான சொத்துக்களுக்காகவும் முறையான வகையில் நிலையான சொத்து ஏட்டினை பேணிச் செல்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் மற்றும் பொருள் மெய்மையாய்வு நடவடிக்கைகள் உடனடியாகப் பூர்த்தி செய்யப்பட்டு அறிக்கை சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

### 1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான இணக்கமின்மைகள்

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கான தொடர்பு ---------------- | இணக்கமின்மைகள ---------------------- | முகாமைத்துவத்தின் கருத்துரை ----------------------------- | பரிந்துரை ----------- |
|---|---|---|---|---|
| (அ) | 2011 ஏப்ரல் 29 ஆந் திகதிய 2011/06 ஆம் இலக்க தொழில் திணைக்கத்தின் சுற்றறிக்கையின் 2 ஆம் பிரிவு | அலுவலகத்திற்கு முறைப்பாடு கிடைத்து 14 நாட்களுக்குள் விசாரிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் எனினும், மத்திய கொழும்பு மாவட்ட தொழிலாளர் அலுவலகத்திற்கு 2019, 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில் பெறப்பட்ட முறைப்பாடுகளில் முறையே 10, 48 மற்றும் 47 முறைப்பாடுகள் 2022 மே மாத கணக்காய்வு திகதி வரையிலும் விசாரித்து நிறைவு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | மத்திய கொழும்பு மாவட்ட தொழிலாளர் அலுவலகத்திற்கு 2019, 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில் பெறப்பட்ட முறைப்பாடுகளில் முறையே 10, 48 மற்றும் 47 முறைப்பாடுகள் தற்போது விசாரணை செய்யப்பட்டு வருகின்றது. | முறைப்பாடுகள் தொடர்பான சுற்றறிக்கையின் பிரகாரம் செயல்படுவதன் மூலம் உறுப்பினர்களுக்கு உயர்ந்த சேவையை வழங்குதல். |
| (ஆ) | 2007 ஒக்டோபர் 31 ஆந் திகதிய 15/2007 ஆம் இலக்க தொழில் திணைக்கத்தின் சுற்றறிக்கை | | | |
| (i) | 1.1 ஆம் பிரிவு | தொழில் உத்தியோகத்தர்களின் அரை மாதாந்திர வேலைத் திட்டங்கள் அதன் ஆரம்ப திகதிக்கு குறைந்தபட்சம் 3 நாட்களுக்காவது முன்னரே உதவித் தொழில் ஆணையாளரிடம் சமர்ப்பிக்கப்பட்டு அனுமதியினை பெற்றுக் கொள்ள வேண்டி இருந்த போதிலும் மீளாய்வாண்டில் மட்டக்களப்பு மாவட்ட தொழில் அலுவலகத்தில் தொழில் 7 உத்தியோகத்தர்களுக்கு உரிய 36 மாதாந்திர பயண வேலைத் திட்டங்களுக்கு அவ்வாறு அனுமதி பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. | கொவிட் 19 தொற்று நோய் காரணமாகப் பயண வேலைத் திட்டங்கள் தாமதம் அடைந்துள்ளன. தற்போது பயண வேலைத் திட்டங்களைப் பெற்றுக் கொடுக்குமாறு அறிவுரை வழங்கப்பட்டுள்ளதுடன் உதவித் தொழில் ஆணையாளரினால் கண்காணிப்பு செய்யப்படுகின்றது. | சுற்றறிக்கைகளுக்கு இணங்கும் வகையில் உத்தியோகத்தர்களை தெளிவுபடுத்தல் மற்றும் மேற்பார்வை செய்தல் இடம்பெறுதல் வேண்டும். |
| (ii) | 1.2 ஆம் பிரிவு | அங்கீகரிக்கப்பட்ட பயண வேலைத் திட்டங்கள் திருத்தப்பட வேண்டுமாயின் முன் அனுமதியினை பெற்றுக் | பயண வேலைத் திட்டங்களில் தவற விடப்பட்ட கடமைகளுக்கு முன் அனுமதியினைப் | சுற்றறிக்கைகளுக்கு இணங்கும் வகையில் உத்தியோகத்தர்கை |

| | | | | |
|---|---|---|---|---|
| | | கொள்ள வேண்டிய போதிலும் மீளாய்வாண்டில் மட்டக்களப்பு மாவட்ட தொழில் அலுவலகத்தில் திருத்தப்பட்ட வேலைத் திட்டங்களுள் சுமார் 65 சதவீதமானவைகளுக்கு அவ்வாறு முன் அனுமதி பெற்றுக் கொள்ளபட்டிருக்கவில்லை. | பெற்றுக் கொள்ளுமாறும் அவர்களது நாட்குறிப்பில் அதற்கான காரணத்தைக் குறிப்பிடுமாறும் தொழில் உத்தியோகத்தர்களுக்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. | ள தெளிவுபடுத்தல் மற்றும் மேற்பார்வை செய்தல் இடம்பெறுதல் வேண்டும். |
| (iii) | 2 ஆம் பிரிவு | மட்டக்களப்பு மாவட்ட தொழில் அலுவலகத்தின் அதிகாரத்திற்கு உட்பட்ட பிரதேசத்தில் அமைந்துள்ள 1554 பதிவு செய்யப்பட்ட நிறுவனங்களிடையே 964 நிறுவனங்கள் தொடர்பில் தொழில் உத்தியோகத்தர்களின் களப் பரீட்சிப்பு இடம்பெற்றிருக்கவில்லை. அதனால் அந்த நிறுவனங்களில் இருந்து சட்ட ஏற்பாடுகளுக்கு அமைய சந்தாப் பணம் அனுப்பப்படுகின்றதா என்பது தொடர்பில் தேடுதல் இடம் பெற்றிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. | கொவிட் 19 தொற்றுநோய் நிலவும்போது ஆகக் குறைந்தது 10 நிறுவனங்களை பரீட்சிப்பு செய்யுமாறு தொழில் உத்தியோகத்தர்களுக்கு அறிவுரை வழங்கப்பட்டு இருந்ததுடன், நீண்ட காலமாகத் தவறவிடப்பட்ட நிறுவனங்களை ஆகக் கூடிய எண்ணிக்கையில் பரீட்சிப்பு செய்யுமாறும் அவர்களுக்கு தற்போது அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. மேலும், உதவித் தொழில் ஆணையாளரினால் மேற்பார்வை ஒழுங்கமைப்புக்கு அமைய தெரிவு செய்து வழங்கப்படும் 10 நிறுவனங்களைப் பரீட்சிப்பு செய்யுமாறும் அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. | நிறுவனங்கள் தொடர்பில் எழுமாறாகப் பரீட்சிப்பு மேற்கொள்ளப்பட்டு அங்கத்தவர்களுக்கு சிறந்த சேவையினை வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (iv) | 3.1 ஆம் பிரிவு | தொழில் உத்தியோகத்தர்களினால் மேற்கொள்ளப்படும் அனைத்து பரீட்சிப்புக்கும் உரிய அறிக்கைகள் அதே தினத்தில் அல்லது அதற்கு அடுத்து வரும் முதலாவது அலுவலகத் தினத்தில் கையளிக்கப்பட வேண்டியதுடன் 07 நாட்களுக்குள் அளிக்கப்படாத அறிக்கைகள் தொடர்பில் தாமதத்துக்கான காரணங்கள் உதவித் தொழில் ஆணையாளரினால் விசாரிக்கப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டில் மட்டக்களப்பு மாவட்ட தொழில் அலுவலகத்தில் 61 பரீட்சிப்பு சந்தர்ப்பங்களுக்கு உரிய அறிக்கைகளைச் | தொழில் உத்தியோகத்தர்களிடம் இருந்து காரணங்கள் விசாரிக்கப்பட்டு உள்ளதுடன் அவர்களின் பதில் கடிதங்களுக்கு அமைய தாமதத்திற்கான காரணமாக இருந்தது தொடர்ச்சியாக நாடு முடக்கப்பட்டமை மற்றும் நிலவிய தொற்று நோய் நிலைமையும் ஆகும். | சுற்றறிக்கையின் பிரகாரம் அறிக்கைகளைப் பெற்று கொடுக்குமாறு உரிய உத்தியோகத்தர்களைத் தெளிவுபடுத்துதல் மற்றும் மேற்பார்வை நடவடிக்கைகள் முறைப்படுத்தப்படல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | சமர்ப்பிப்பதற்கு 20 நாட்கள் தொடக்கம் 268 நாட்கள் வரையான காலம் செலவிடப்பட்டு இருந்தது. | | |
| (v) | 5.1 ஆம் பிரிவு | ஒவ்வொரு மாத இறுதியிலும் அனைத்து தொழில் உத்தியோகத்தர்களினாலும் அந்த மாதத்திற்கு உரிய நாளேடு அடுத்த மாதம் 10 ஆம் திகதிக்கு முன்னர் உதவித் தொழில் ஆணையாளரிடம் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டில் மட்டக்களப்பு மாவட்ட தொழில் அலுவலகத்தில் தொழில் உத்தியோகத்தர்களினால் நாளேட்டை சமர்ப்பிப்பதற்கு 28 சந்தர்ப்பங்களில் 01 கிழமை தொடக்கம் 13 கிழமை வரையிலான காலம் செலவிடப்பட்டு இருந்ததுடன் 23 சந்தர்ப்பங்களில் 13 கிழமையை விட அதிக காலம் செலவிடப்பட்டு இருந்தது. | தொழில் உத்தியோகத்தர்களிடம் இருந்து காரணங்கள் விசாரிக்கப்பட்டு உள்ளதுடன் அவர்களின் பதில் கடிதங்களுக்கு அமைய தாமதத்திற்கான காரணமாக இருந்தது தொடர்ச்சியாக நாடு முடக்கப்பட்டமை மற்றும் நிலவிய தொற்று நோய் நிலைமையும் ஆகும். | சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கு அமைய நடவடிக்கை எடுப்பதற்கு உத்தியோகத்தர்களை தெளிவுபடுத்த வேண்டும். |
| (இ) | 1999 பெப்ரவரி 11ஆந் திகதிய 01/99 ஆம் இலக்க தொழில் திணைக்கத்தின் சுற்றறிக்கை | 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளுக்குரிய நிறுவன பரீட்சிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு மிகை அறவீடுகள் மற்றும் பங்களிப்பு தொகையை அறவீடு செய்யும் முதல் அறிவிப்பை வெளியிடுவதற்காக 20 முதல் 534 நாட்கள் வரையான காலம் கடந்திருந்த 9 சந்தர்ப்பங்களும், இறுதி அறிவிப்பை வெளியிடுவதற்கு 20 நாட்கள் தொடக்கம் 91 நாட்கள் வரையான காலம் கடந்து இருந்த 10 சந்தர்ப்பங்களும் மத்திய கொழும்பு மாவட்ட தொழில் அலுவலகம் தொடர்பில் இடம் பெற்ற மாதிரி கணக்காய்வு பரீட்சிப்பில் அவதானிக்கப்பட்டது. மேலும், 21 சந்தர்ப்பங்களுக்கு உரிய முதல் அறிவிப்பை வெளியிட்டு 153 நாட்கள் தொடக்கம் 965 நாட்கள் வரையான காலம் கடந்திருந்தபோதிலும் இறுதி அறிவிப்பு வெளியிடப்படவில்லை. அதே போன்று 33 | நாட்டில் நிலவிய கொவிட் 19 நிலைமை காரணமாக இவ்வாறான அறிவிப்பை வெளியிடுவதற்குத் தாமதம் ஏற்பட்டுள்ளது. மத்திய கொழும்பு மாவட்ட அலுவலகம் தொடர்பாக தற்போது பொது சான்று ஆவணத்தில் 08 முழுமையான பணம் செலுத்துதல் மற்றும் 02 வழக்கு பதிவு செய்தல் இடம் பெற்றுள்ளதுடன் மீதிக்கு வழக்கு பதிவு செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. | அங்கத்துவப் பணம் மற்றும் மேலதிகப் பற்று என்பவற்றை அறவிடுவதற்கான அறிவிப்பைத் தாமதமின்றி அனுப்புவதன் மூலம் அங்கத்தவர்களுக்கு சிறந்த சேவையினை நிறைவேற்ற முடியும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | சந்தர்ப்பங்களுக்குரிய எவ்வித அறிவிப்பும் வெளியிடப்பட்டிருக்கவில்லை. மேலும், மட்டக்களப்பு மாவட்ட தொழில் அலுவலகத்தினால் 2021 ஆம் ஆண்டின் அங்கத்துவப் பணம் மற்றும் மேலதிகப் பற்று என்பவற்றை அறவிடுவதற்காக சேவை வழங்குனர் நிறுவனங்களுக்கு முதலாவது அறிவிப்பு வழங்குவதற்கு 21 நாட்கள் தொடக்கம் 181 நாட்கள் வரையான காலம் செலவிடப்பட்ட 51 சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன. | | |
| (ஈ) | 1958 இன் 15 ஆம் இலக்க ஊழியர் சேம நிதிய சட்டத்தின் 10 ஆம் பிரிவு | ஏதேனும் நிறுவனத்தில் ஊழியர்களுக்கு உரிய அங்கத்துவப் பணம் ஒவ்வொரு மாதமும் முடிவடைந்து அடுத்து வரும் மாதத்தின் இறுதி திகதிக்கு முன்னர் நிதியத்திற்கு அனுப்பப்படுதல் வேண்டும் எனினும், மட்டக்களப்பு மாவட்ட தொழில் அலுவலக அதிகாரப் பிரதேசத்திற்கு உரிய 41 நிறுவனங்களுக்கு உரியதான 03 மாதத்திற்கும் 21 ஆண்டுகளுக்கு இடையிலான காலம் தொடக்கம் அங்கத்துவ பணம் அனுப்பப்பட்டிருக்கவில்லை என்பது ஊழியர் சேம நிதியத் தரவு ஒழுங்கமைப்பினைப் பரீட்சிக்கும்போது அவதானிக்கப்பட்டது. | குறித்த நிறுவனங்களுக்குச் சென்று முறையான நடவடிக்கை எடுக்குமாறு தொழில் உத்தியோகத்தர்களுக்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. | தொழில் வழங்குனர்கள் தொடர்பில் மேற்கொள்ளப்படும் மாதிரி பரீட்சிப்பினை அதிகரித்தல் மற்றும் முறைப்படுத்துதல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

--------------------

### 2.1 நிதிப் பெறுபேறுகள்

----------------------------

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டுப் பெறுபேறு ரூபா 340,728 மில்லியனான இலாபமாவதுடன், அதனோடு ஒத்த கடந்த வருடத்தின் இலாபம் ரூபா 283,986 மில்லியன் ஆகும். அதன் பிராகாரம், செயற்பாட்டுப் பெறுபேறுகளில் ரூபா 56,742 மில்லியனான அதிகரிப்பொன்றினை அவதானிக்கக்கூடியதாக இருந்தது. இந்த அதிகரிப்பிற்கு நிதி உபகரணங்களின் நியாயமான பெறுமதி சரிசெய்தல் அடிப்படையில் இனங் காணப்பட்ட இலாபமானது கடந்த வருடத்துடன் ஒப்பிடும் போது ரூபா 36,817 மில்லியனால் அதிகரித்தமையும், நிதியத்தின் வட்டி வருமானம் கடந்த வருடத்துடன் ஒப்பிடும் போது ரூபா 16,269 மில்லியனால் அதிகரித்தமையும் காரணமாக இருந்தது.

## 2.2 பிரதான வருமான விடயங்களின் போக்கு தொடர்பான பகுப்பாய்வு

| விபரம் | 2021 ஆம் ஆண்டு | 2020 ஆம் ஆண்டு | வருமானம் அதிகரித்தல் / (குறைவடைதல்) | |
|---|---|---|---|---|
| | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | % |
| (அ) வட்டி வருமானம் | | | | |
| i. திறைசேரி பிணைமுறிகள் | 285,052 | 266,130 | 18,922 | 7.11 |
| ii. திறைசேரி உண்டியல்கள் | 256 | 415 | (159) | (38.31) |
| iii. நிலையான வைப்புக்கள் | 3,857 | 5,877 | (2,020) | (34.37) |
| iv. மீள் கொள்வனவு உடன்படிக்கை | 544 | 521 | 23 | 4.41 |
| v. கடன் பத்திரம் - பட்டியலிடப்பட்ட | 3,153 | 3,601 | (448) | 12.44 |
| vi. பட்டியலிடப்படாத | 816 | 863 | (47) | (5.45) |
| (ஆ) பங்கிலாப வருமானம் - சாதாரண பங்குகள் | | | | |
| i. பட்டியலிடப்பட்ட | 4,057 | 2,451 | 1,606 | 65.52 |
| ii. பட்டியலிடப்படாத | 2.628 | 466 | 2,162 | 463.95 |

கடந்த ஆண்டுடன் ஒப்பிடும்போது 2021 ஆம் ஆண்டில் திறைசேரி பிணைமுறிகள் மற்றும் பட்டியலிடப்பட்ட கம்பெனிகளின் கடன் பத்திரங்களின் முதலீடுகளில் பெற்றுக் கொள்ளப்பட்ட வட்டி வருமானம் முறையே 7.11 சதவீதத்தினாலும் மற்றும் 12.44 சதவீதத்தினாலும் அதிகரித்திருந்தது. அவ்வாறு இருந்த போதும், திறைசேரி உண்டியல்கள் மற்றும் நிலையான வாய்ப்புகளின் முதலீடுகளில் இருந்து பெறப்பட்ட வட்டி வருமானம் முறையே 38.31 சதவீதத்தினாலும் மற்றும் 34.37 சதவீதத்தினாலும் குறைந்திருந்தது. எவ்வாறிருப்பினும், நிதியத்தின் மொத்த வட்டி வருமானம் கடந்த வருடத்துடன் ஒப்பிடும் போது 5.86 சதவீதத்தினால் அதிகரித்திருந்தது.
மேலும், நிதியத்தின் பங்கிலாப வருமானத்தை கவனத்தில் கொள்ளும்போது கடந்த வருடத்துடன் ஒப்பீட்டளவில் பங்கிலாப வருமானம் 129.17 சதவீதத்தினால் அதிகரித்திருந்தது.

## 2.3 விகிதப் பகுப்பாய்வு

சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம், மீளாய்வாண்டு மற்றும் கடந்த வருடத்திற்கான நிதியத்தின் முக்கியமான சில விகிதங்கள் பின்வருமாறு.

| விகிதம் | 2021 | 2020 |
|---|---|---|
| தேறிய இலாப வீதம் (%) | 87.35 | 85.8 |
| சராசரி முதலீட்டின் மீதான பெறுபேறு வீதம் (%) | 10.78 | 10.09 |
| அங்கத்துவ மீதிக்கமைவான நலன்கள் வீதம் (%) | 8.36 | 8.37 |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 இணங்காணப்பட்ட நட்டங்கள்

| | கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நிதியத்தின் அங்கத்தவர்களுக்குப் புதிய அடையாள அட்டைகளை வழங்குதல் மற்றும் பதிவு செய்தல் | நாடு முழுவதிலும் பொருத்தப்பட்டுள்ள இயந்திரங்களை மீண்டும் பிரதான | சிறந்த திட்டம் மற்றும் ஆய்வுடன் செயற்திட்டம் |

| | | | |
|---|---|---|---|
| | போன்ற கணணி நடவடிக்கைகளுக்காக 15,000 அட்டைகள் ரூபா.12.61 மில்லியனுக்கு 2008 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்டிருந்த போதிலும், இந்த அட்டைகள் பயன்படுத்தப்படாது செயலற்று காணப்பட்டது. மேலும், இந்த செயல் திட்டத்திற்காக ரூபா.17.67 மில்லியன் செலவில் கொள்வனவு செய்யப்பட்ட 35 இயந்திரங்களில் 02 இயந்திரங்கள் பயன்படுத்தப்படாது அகற்றப்பட்டு இருந்ததுடன் மீதி 33 இயந்திரங்கள் தொடர்பில் பொருத்தமான வழிவகைகள் மேற்கொள்ளப்பட்டு நடைமுறைப்படுத்தப் பட்டிருக்கவில்லை. | அலுவலகத்தில் சேகரித்து பயன்படுத்தக்கூடிய பாகங்களைப் பயன்பாட்டிற்கு எடுப்பதற்கு பரிந்துரை செய்யப்பட்டுள்ளதுடன் தற்போது அந்த இயந்திரங்கள் பிரதான அலுவலகத்திற்கு கொண்டுவரப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் அவற்றில் பயன்படுத்தக்கூடிய பாகங்கள் தேவைப்பாடுகள் உள்ள அலுவலகங்களை இனம் கண்டு அந்த அலுவலகங்களுக்கு விநியோகிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | ஆரம்பிக்கப்பட வேண்டும் மற்றும் அங்கத்துவ நிதியினை செலவிடும் போது உற்பத்தித் திறனாக செலவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | நிதியத்தின் அங்கத்தவர்களின் தரவுகளை கணணி மயப்படுத்தல் மற்றும் ஸ்கான் செய்தல் தொடர்பாக வெளித் தரப்பினருடன் உடன்படிக்கை செய்யப்பட்டிருந்தது. மத்திய கோவைப் பிரிவின் ஊடாக கணக்கிடப்பட்ட தரவுகளைக் கணனிமயப்படுத்தும் போது மற்றும் ஸ்கேன் செய்யப்படும் போது ஆகிய இரு சந்தர்ப்பங்களிலும் ஏற்படும் குறைபாடு சதவீதத்திற்கு உரிய தண்டம் மாதத்திற்கு உரிய முழுமையான விலை பட்டியலில் குறைத்துக் கொள்வதற்குப் பதிலாக குறைபாட்டு சதவீதத்தை ஒரு மாதத்திற்கு வழங்கப்படும் இரண்டு விலைப் பட்டியலில் ஒன்றில் மட்டும் குறைத்துக் கொள்ளப் பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. அதற்கமைய உடன்படிக்கையின் பிரகாரம் குறைத்துக்கொள்ள படவேண்டிய தண்டம் ரூபா 175,684 இனால் குறைவாகக் கணக்கிடப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | வெளி நிறுவனங்களின் மூலம் இடம்பெறும் குறைபாடுகளைப் பரீட்சித்து அவை தரவுகள் கணணி மயப்படுத்தும் குறைபாடுகளாக இருப்பின் குறித்த குறைபாடுகள் தரவுகளை கணினி மயப்படுத்துவதற்காக சமர்ப்பிக்கும் விலைப்பட்டியலின் மூலமும் ஸ்கேனுக்கு உரிய குறைபாடுகள் அதற்குரிய விலைப் பட்டியலின் மூலமும் அந்தந்த மாதங்களில் குறைத்துக் கொள்வதற்கான விலைப் பட்டியலுடன் குறிப்பிடப்பட்டு கொடுப்பனவிற்காகச் சமர்ப்பிக்கப்படும். | உடன்படிக்கையின் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளப்படுதல் வேண்டும். |

**3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

| | கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2021 திசெம்பர் 31 ஆம் திகதியில் பட்டியலிடப்பட்ட 11 கம்பெனிகளில் மேற்கொள்ளப்பட்டிருந்த ரூபா 7.386 மில்லியன் சாதாரண பங்கு முதலீடுகளுக்காக 2019, 2020 மற்றும் 2021 ஆகிய 03 வருடங்களிலும் பங்கிலாப வருமானம் கிடைத்திருக்கவில்லை. இந்த 11 கம்பெனிகளில் 02 கம்பெனிகளில் மட்டும் மேற்கொள்ளப்பட்டிருந்த முதலீடுகள் ரூபா 3,410.57 மில்லியன் ஆகும். | இவற்றில் 6 கம்பெனிகள் சுற்றுலா வியாபாரம் மற்றும் இணைந்த சேவைகளை வழங்கும் நிறுவனங்களாக உள்ளதுடன், தேசிய மற்றும் சர்வதேச சுற்றுலா மட்டுப்படுத்தப்பட்டு அதற்கு முகம் கொடுத்து அந்த நிறுவனங்களின் செயற்பாட்டு நடவடிக்கைகள் மிகவும் பலவீனம் அடைந்ததுடன், பெரும்பாலான நிறுவனங்களின் செயற்பாடுகள் நட்டத்தை அறிக்கையிட்டு இருந்தன. அதற்கமைய அந்த நிறுவனங்களுக்கு பங்கிலாபத்தைத் தெரிவிக்கும் நிலை இருக்கவில்லை. | முதலீடுகளை மேற்கொள்ளும் போது அங்கத்தவர்களுக்கு உச்ச நலனைப் பெற்றுக் கொடுப்பதற்கு ஏற்ற வகையில் உகந்த முதலீடுகளை மேற்கொள்ளுதல் வேண்டும். |
| (ஆ) | 2021 டிசம்பர் 31 ஆம் திகதியில் பட்டியலிடப்பட்ட வெட்டு கம்பெனிகளின் மேற்கொள்ளப்பட்டிருந்த ரூபா 9,486.07 வெள்ளியால் ஆன சாதாரண பங்கு முதலீடுகளுக்கு 2021 ஆம் ஆண்டில் பங்கிலாப வருமானம் கிடைத்திருக்கவில்லை. | 2020-2021 ஆண்டுகளில் கொவிட்-19 தொற்று நோயின் போது, அதன் மூலம் தேசிய மற்றும் சர்வதேச தளத்தில் ஏற்பட்ட பொருளாதார சிக்கல்களில் தாக்கமாக உள்நாட்டு பொருளாதாரத்தில் ஏற்பட்ட பாரிய ஒடுக்கத்தில் ஒன்றிணைந்த தாக்கம் இந்த நிறுவனங்களுக்கும் தாக்கத்தை ஏற்படுத்தியதால், அந்த வியாபாரங்களில் பாரிய வீழ்ச்சி ஏற்பட்டது என்பதும், குறித்த நிறுவனங்களை மூடாது நடாத்திச் செல்வதற்குக் கருத்தில் கொள்ளப்பட வேண்டிய பிரயத்தனத்தை மேற்கொண்டுள்ளது என்பதும், எங்களது அவதானிப்பாகும். | முதலீடுகளை மேற்கொள்ளும் போது அங்கத்தவர்களுக்கு உச்ச நலனைப் பெற்றுக் கொடுப்பதற்கு ஏற்ற வகையில் உகந்த முதலீடுகளை மேற்கொள்ளுதல் வேண்டும். |
| (இ) | 2010 ஆம் ஆண்டில் விமான நிறுவனம் ஒன்றில் மேற்கொள்ளப்பட்ட ரூபா.500 மில்லியன் முதலீட்டுக்காக உரிய முதலீடு செய்யப்பட்ட சந்தர்ப்பத்தில் இருந்தே எதுவிதமான வருமானமும் நிதியத்திற்கு கிடைத்திருக்கவில்லை.. | இந்த முதலீட்டின் தற்போதைய பெறுமதி இழப்புக்கு பின்னர் ரூபா. 100 ஆகக் கணக்கீடு செய்யப்பட்டுள்ளது. இது முழுமையாக அரச உரிமைத்துவத்தின் கீழ் காணப்படும் நிறுவனமாக உள்ளதுடன் தொடர்ச்சியாக நட்டம் ஏற்பட்ட காரணத்தினால் அரசாங்கத்தினால் திறைசேரியின் மூலம் பெற்றுக் கொடுக்கப்படும் நிதி ஒதுக்கீடுகளின் அடிப்படையில் நடாத்திச் செல்லப்படும் நிறுவனமாகும். | முதலீடுகளை மேற்கொள்ளும் போது அங்கத்தவர்களுக்கு உச்ச நலனைப் பெற்றுக் கொடுப்பதற்கு ஏற்ற வகையில் உகந்த முதலீடுகளை மேற்கொள்ளுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | 2021 திசெம்பர் 31 ஆம் திகதியில் “த பினான்ஸ் கம்பெனி” யின் அனுமதிப்பத்திரம் இரத்துச் செய்யப்பட்ட காரணத்தால் நிதியத்திற்கு ரூபா 205.49 மில்லியன் இழப்பு ஏற்பட்டிருந்தது. | நிறுவனத்தைக் கலைக்கும்போது, நிதியத்திற்கு அதன் முதலீடு அல்லது பங்கு, மீதி பெறுமதியாகக் கிடைக்கக் கூடும். | முதலீடுகளை மேற்கொள்ளும் போது அங்கத்தவர்களுக்கு உச்ச நலனைப் பெற்றுக் கொடுப்பதற்கு ஏற்ற வகையில் உகந்த முதலீடுகளை மேற்கொள்ளுதல் வேண்டும். |
| (உ) | நிதியத்தினால் 2021 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட சாதாரண பங்கு விற்பனையில் 05 நிறுவனங்களில் மேற்கொள்ளப்பட்டிருந்த சாதாரண செலவு ரூபா. 93.39 மில்லியனான பங்கு விற்பனையில் ரூபா. 53.76 மில்லியன் மூலதன லாபம் கிடைத்திருந்தது. | பட்டியலிடப்பட்ட பங்கு முதலீட்டில் ஐந்தின் விலை மொத்த முதலீட்டு விலை சுட்டியில் அதிகரித்த போதும், தொடர்ச்சியாக சுமத்தப்பட்ட மொத்த செலவை விட குறைந்த மட்டத்தில் காணப்பட்டது என்பதால், அவற்றின் விலை மேலும் அதிகரித்துச் செல்லும் போக்கு இல்லை என மதிப்பிடப்பட்டதன் பின்னர், நிதி சபையின் அனுமதியின் பிரகாரம் அப்போதைய சந்தையில் நிலவிய விலையில் விற்பனை செய்யப்பட்டது. | அங்கத்தவர்களுக்கு உச்ச நலனைப் பெற்றுக் கொடுப்பதற்கு ஏற்ற வகையில் முதலீடுகள் முகாமைத்துவப்படுத்தப்படல் வேண்டும். |
| (ஊ) | பட்டியலிடப்படாத கம்பெனி பங்கு முதலீடுகளில் ரூபா 5000 மில்லியன் அதாவது 53% சதவீதம் 2013 ஆம் ஆண்டில் கன்வில் ஹோல்டிங்ஸ் ஹோட்டல் தொகுதியை நிர்மாணிப்பதற்காக முதலீடு செய்யப்பட்டிருந்ததுடன் அந்த ஹோட்டல் தொகுதி நிர்மாணிப்பதற்கு உரிய கிராண்ட் ஹைட் கொழும்பு செயற்திட்டத்தின் நிர்மாண நடவடிக்கைகள் 2020 ஜூலை மாதத்தில் மீண்டும் ஆரம்பிக்கப்பட்ட போதும் அதற்குத் தேவையான கொள்முதல் செயல்முறைகள் மேற்கொள்வதற்கும் நிதித் தேவைப்பாடுகளை சேகரிப்பதற்கும் பணிப்பாளர் சபைக்கு தேவையான அதிகாரங்களை வழங்குதல் 2022 ஜனவரி 4 ஆம் திகதி இடப்பட்ட இலக்கம் 21/2278/306/100 கொண்ட அமைச்சரவைப் பத்திரத்தின் மூலம் இடம்பெற்றிருந்தது. அதற்கமைய திட்டமிடப்பட்ட | மேலே குறிப்பிடப்பட்ட அமைச்சரவைப் பத்திரத்தின் மூலம் நிர்மாணிப்பு மீண்டும் ஆரம்பிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டு இருந்தபோதிலும், அதற்குத் தேவையான நிதி ஏற்பாடுகளை பெற்றுக்கொள்ளுதல் மற்றும் அந்நிய செலாவணி பெற்றுக் கொள்வதில் சிக்கல் காணப்பட்டதுடன், அதன் காரணமாக வெளிநாட்டு முதலீடுகளை பெற்றுக் கொள்வதற்காக 2022 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதத்தில் நிறுவனத்தினால் முதலீட்டுப் பிரேரணைகள் கோரப்பட்டிருந்தது. பின்னர், பங்குகள் மற்றும் கடன் முதலீடு செய்வதற்கு விருப்பத்தை தெரிவித்து இருந்த வெளிநாட்டு நிறுவனத்திற்கு அதற்கான அனுமதி, 2022 ஜனவரி 4 ஆம் திகதி வழங்கப்பட்டிருந்தது. எனினும், தற்போது நாட்டில் நிலவும் அந்நிய செலாவணி நெருக்கடி மற்றும் பொருளாதார நிலைமையின் கீழ் அந்த யோசனையை மேலும் முன்னோக்கி கொண்டு செல்வதற்குக் குறித்த | முதலீடுகளை மேற்கொள்ளும் போது அங்கத்தவர்களுக்கு உச்ச நலனைப் பெற்றுக் கொடுப்பதற்கு ஏற்ற வகையில் ஆபத்து குறைந்ததான உகந்த முதலீடுகளை மேற்கொள்ளுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | வகையில் 2021 திசெம்பர் 27 ஆம் திகதி அளவில் ஹோட்டல் தொகுதி நிர்மாணிக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை. அதனால் மேலே கூறப்பட்ட முதலீடு மேற்கொள்ளப்பட்டு 8 வருட காலம் கடந்துவிட்ட போதிலும் இந்த முதலீட்டினால் எதுவித பிரதிபலனும் நிதியத்திற்கு கிடைத்திருக்கவில்லை. | வெளிநாட்டு முதலீட்டு நிறுவனம் விருப்பமின்மையைத் தெரிவித்துள்ள காரணத்தினால் அதனை செயல்படுத்துவதற்கு முடியாதுள்ளது. அதற்கமைய, கிராண்ட் ஹைட் ஹோட்டல் தொகுதியை முழுமையாக விற்பனை செய்வதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றது என குறித்த நிறுவனத்தினால் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதற்கமைய விரைவில் இந்த முதலீட்டினை மாற்றிக் கொள்ள முடியும் என எதிர்பார்க்கப்படுகின்றது. | |
| (எ) | 2021 திசெம்பர் 31 ஆம் திகதியில் பங்குச் சந்தையில் மேற்கொள்ளப்பட்ட ரூபா 84,067 மில்லியன மொத்த முதலீட்டில் இருந்து ரூபா 9,681 மில்லியன் அதாவது 12 சதவீதம் ஹோட்டல் துறையில் உள்ள 11 நிறுவனங்களில் முதலீடு செய்யப்பட்டிருந்தன. அது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. | | |
| (i) | இந்த முதலீடுகளில் 2021 திசெம்பர் 31 ஆம் திகதியில் சந்தைப் பெறுமதி ரூபா. 2,659.51 மில்லியன் குறைந்திருந்தது. | 2019 - 2021 வரையான காலப் பகுதியில் தேசிய மற்றும் சர்வதேச சுற்றுலா மட்டுப்படுத்தப்பட்டமைக்கு முகம் கொடுத்து அந்த நிறுவனங்களின் செயற்பாட்டு நடவடிக்கைகள் மிகவும் பலவீனப்பட்டு இருந்ததுடன், பெரும்பாலான நிறுவனங்கள் செயற்பாட்டு நட்டத்தினை வெளியிட்டிருந்தன. | முதலீடுகளை மேற்கொள்ளும் போது அங்கத்தவர்களுக்கு உச்ச நலனைப் பெற்றுக் கொடுப்பதற்கு ஏற்ற வகையில் உகந்த முதலீடுகளை மேற்கொள்ளுதல் வேண்டும். |
| (ii) | ஹோட்டல் துறையில் செய்யப்பட்ட முதலீடுகள் 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டு இறுதியில் ரூபா. 10,084.28 மில்லியனும் 2021 ஆம் ஆண்டு இறுதியில் ரூபா. 9,681.52 மில்லியனுமாக இருந்ததுடன் இந்த முதலீட்டுக்காக 2021 ஆம் ஆண்டில் எதுவிதமான பிரதிபலனும் கிடைத்திருக்கவில்லை. 2019 | 2019 - 2021 வரையான காலப் பகுதியில் தேசிய மற்றும் சர்வதேச சுற்றுலா மட்டுப்படுத்தப்பட்டமைக்கு முகம் கொடுத்து அந்த நிறுவனங்களின் செயற்பாட்டு நடவடிக்கைகள் மிகவும் பலவீனப்பட்டு இருந்ததுடன், பெரும்பாலான நிறுவனங்கள் செயற்பாட்டு நட்டத்தினை வெளியிட்டிருந்தன. | முதலீடுகளை மேற்கொள்ளும் போது அங்கத்தவர்களுக்கு உச்ச நலனைப் பெற்றுக் கொடுப்பதற்கு ஏற்ற வகையில் உகந்த முதலீடுகளை மேற்கொள்ளுதல் வேண்டும். |

மற்றும் 2020 ஆம் ஆண்டுகளில் இந்த முதலீடுகளின் அடிப்படையில் கிடைத்த பிரதிபலன் முறையே ரூபா. 103.18 மில்லியன் மற்றும் ரூபா. 47.40 மில்லியன் அதாவது 2.47 சதவீதம் மற்றும் 0.98 சதவீதம் ஆகும். மேலும், 7 நிறுவனங்களில் மேற்கொள்ளப்பட்டிருந்த ரூபா. 3,174.54 மில்லியன் முதலீட்டுக்காக 2020 மற்றும் 2019 ஆண்டுகளிலும் எதுவித பிரதிபலனும் கிடைத்திருக்கவில்லை.

## 3.3 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | பிரதான அலுவலகத்தில் மற்றும் மாவட்ட தொழில் அலுவலகங்களில் கணினி வலையமைப்பினைத் தடையின்றி பேணிச் செல்வதற்குத் தேவையான பராமரிப்பு மற்றும் சேவை வழங்கல் சரியான காலத்திற்கு செய்யப்பட வேண்டிய போதிலும், 2015 ஆம் ஆண்டு தொடக்கம் 2020 ஆம் ஆண்டு வரையான காலப் பகுதியில் 6 சந்தர்ப்பங்களுக்கு உரியதாக அவ்வாறு உடன்படிக்கை செய்யப்பட்ட காலம் பூர்த்தியடைந்து இருந்தபோதிலும், மீண்டும் உடன்படிக்கை மேற்கொள்ளப்படாத சந்தர்ப்பம் அவதானிக்கப்பட்டது. மேலும், பராமரிப்பு சேவையினைப் பெற்றுக் கொள்ளும்போது இருக்கும் நிறுவனத்திற்கு பதிலாக புதிய நிறுவனத்தினைத் தெரிவு செய்வதற்கும், அங்கு நிபுணத்துவ அறிவுடைய நபர்களைக் கொண்ட தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவினை நியமிப்பதற்குத் திணைக்களத்தின் கொள்முதல் குழுவினால் தீர்மானம் எடுக்கப்பட்டு இருந்த போதிலும் ஆழவைழசபை ளூலளவநஅ மற்றும் ீளநசநைள ளூநசளைஉநள தொடர்பில் அவ்வாறான நடவடிக்கையின்றி தொடர்ந்தும் உடன்படிக்கை காலம் நீடிக்கப்பட்டு முன்னர் வழங்கப்பட்டிருந்த நிறுவனங்களுக்கே பராமரிப்பு சேவை நடவடிக்கைகள் பெற்றுக் கொடுக்கப்பட்டிருந்தன. | 2021 ஆம் ஆண்டு தொடர்பில் கருத்தில் கொள்ளும் போது நாடு முழுவதும் பரவியிருந்த கொவிட் - 19 தொற்று நோய் காரணமாகப் பராமரிப்பு மற்றும் சேவை மேற்கொள்வதற்கு உரிய நிறுவனத்தைத் தெரிவு செய்வதில் நடைமுறைச் சிக்கல்கள் எழுந்த காரணத்தினால் உடன்படிக்கையிடல் மேற்கொள்ளப்படவில்லை என்பதனை மேலும் தெரிவித்துக் கொள்கிறேன். | ஒப்பந்த காலம் முடிவடைந்த உடன்படிக்கைக்கு புதிய ஒப்பந்தங்களை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக நிதியத்தின் அங்கத்துவ நிதியத்தினுள் உள்ள தொழில் ஆணையாளர் கணக்கில் தொழில் தருநர்களுக்கு எதிராக வழக்கு தொடர்வதன் மூலம் திணைக்களத்தால் அறவிடப்பட்டிருந்த | கொவிட் -19 தொற்று நோய் பரவியமை காரணமாக மாவட்ட அலுவலகங்களில் இருந்து தகவல்களைப் பெற்றுக் கொள்வதில் தாமதம் | தீர்ப்பனவு செய்யப்படாத பங்களிப்பு பணத்தை உடனடியாகத் தீர்ப்பனவு |

| | | |
|---|---|---|
| ரூபா. 11,456 மில்லியனான தொகை மற்றும் அவ்வாறு வழக்கு தொடரப்பட்டு அறவிடப்பட்டு தீர்ப்பனவு செய்யப்படும் வரையிலும் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த ரூபா.301 மில்லியனான தொகையை ஒவ்வொரு அங்கத்துவ கணக்கிற்கும் செலவு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், தொழில் தருநரின் பெயரில் தனித்தனியாக பேணிச் செல்லப்படும் "நடைமுறை ஆண்டின் பங்களிப்பு பணம் இலக்கம் 01" எனும் பெயரிலான கணக்கின் 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான ரூபா. 70,832 மில்லியன் மீதியானது உரிய அங்கத்தவர்களை இனங்கண்டு தீர்ப்பனவு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான நிறுத்தி வைக்கப்பட்ட நலன்கள் மற்றும் உரித்து கோரப்படாத நலன்களாக ரூபா. 956 மில்லியனும் குறை / மிகைப் பங்களிப்பு பணமாக ரூபா.2,117 மில்லியனும் குறை/மிகை நலன்களை செலுத்தலாக ரூபா. 353 மில்லியனும் அங்கத்துவ நிதியத்தின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும், அந்த மீதிகளை இனங்கண்டு தீர்ப்பனவு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.<br><br>மேற்குறித்த அங்கத்துவக் கணக்குகளில் செலவு வைக்கப்படாது காணப்படும் கணக்குகளை தீர்ப்பனவு செய்வதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறு 2013, 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளின் போது அரச கணக்குகள் குழுவினாலும் கட்டளையிடப்பட்டிருந்தது.. | ஏற்பட்டமையும், தொழில் தருநர் தரப்பினரின் போதுமான ஒத்துழைப்பு கிடைக்காமையும் இந்த தாமதத்தில் செல்வாக்கு செலுத்தி இருந்தன. எதிர்காலத்தில் தொழில் திணைக்களத்தினால் அங்கத்துவ பணம் ஒற்றைக் கணக்கில் இடுதல் மற்றும் குறித்த திருத்தங்கள் "சீ" அறிக்கையில் மட்டும் அனுப்புதல், குறைபாடுடைய திருப்பி அனுப்பப்பட்ட "சீ" அறிக்கையைத் திருத்தி கூடிய அளவு விரைவில் கணக்காண்டினுள் அனுப்புதல் மற்றும் விகிதாசார முறைமையின் கீழ் "சீ" அறிக்கையை சமர்ப்பிப்பதல் என்பவற்றிற்குத் தொழில் திணைக்களத்தை ஈடுபடுத்துவதன் அடிப்படையில் இந்த கணக்கில் தீர்க்கப்படாது சேர்ந்த மீதிகள் படிப்படியாகக் குறைந்து செல்லும் என எதிர்பார்க்கப்படுகின்றது. | செய்வதற்கு செயற்திறனான வேலைத் திட்டமொன்றைத் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 3.4 பெறுகைகள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மெஹெவர பியசவில் அமைந்துள்ள நிதியத்தின் அலுவலக வளாகத்தில் உள்ளக வடிவமைப்பு கட்டமைப்பினை தயாரிக்கும் செயற்பாட்டிற்காக 2020 ஆம் ஆண்டில் முழு மதிப்பீட்டுச் செலவு ரூபா. 135.3 மில்லியன் தொகையினைக் கொள்முதல் வழிகாட்டல்களைப் பின்பற்றாது கட்டடத் திணைக்களத்திற்கு பெற்றுக் கொடுக்கப் பட்டிருந்த போதிலும் 2022 ஏப்ரல் 30 ஆம் திகதி வரையிலும் உள்ளக வடிவமைப்பு தயாரிக்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | ஊழியர் சேம நிதிப் பிரிவின் உள்ளக வடிவமைப்பு தயாரிக்கும் ஒப்பந்தத்திற்கு உரிய கொடுப்பனவு கொள்முதல் குழுவின் தீர்மானம் மற்றும் கட்டடத் திணைக்களத்தின் கோரிக்கை, பொறியியலாளரின் (சிவில்) பரிந்துரை என்பவற்றிற்கு அமையவே மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் இந்த உள்ளக வடிவமைப்பு தயாரிக்கும் செயற்பாடு தற்போது ஆரம்பிக்கப்பட்டு குறித்த வடிவமைப்பு நடவடிக்கை இடம்பெற்று வருகின்றது. | கொள்முதல் வழிகாட்டல்கள் பின்பற்றப்பட்டும், நிதியத்தினை செயல்திறன் மற்றும் உற்பத்தித் திறனான வகையில் பயன்படுத்தும் விதமாகவும் கொள்முதல்கள் மேற்கொள்ளப்படுதல் வேண்டும். |